"வயிற்றின் கொடுமை," "பாதகண்ட புராதனம்," இதில் முக்கியமானவை.

தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. துந்துபிஞு புரட்டாசிமீ 22உ (8-10-'22.) ப. 23.

விஷய அடக்கம்.

1. பாட்டுகள் 225
[ஸ்ரீமதி பாலஸுந்தரி தேவீ]
2. வர்த்தமானம் 226
3. புயற்காற்று 227
(ஸ்ரீமான் வே. நாராயணையர் எம்.ஏ.எம்.எல்., எழுதியது)
4. பரத கண்ட புராதனம் 229
(ஸ்ரீமான் வெ. கா. ராமநாதன். பி.ஏ. பி.எல்)
5. வயிற்றின் கொடுமை 232

ஸரஸ்வதி பூஜை விடுமுறையால் சென்ற வாரம் சஞ்சிகை பிரசுரிக்கப்படவில்லை.

பாட்டுகள்

[ஸ்ரீமதி பாலஸுந்தரி தேவீ]

சின்னஞ் சிறு பாவை யொத்த லீலா-நீ
என்னை விட்டு எங்கு சென்றாய் லீலா.
பொன்னைப் போன்ற காந்தியுள்ள லீலா—நீ
மின்னைப் போல் மறைந்த தென்ன லீலா.
சேயென்று நினைத்தேனடி லீலா—உன்னை
மாயை யென்றறிகிலேனே லீலா.
நீயே சதமென்றிருந்தேன் லீலா—என்னைப்
பேயாக்கி நீ வைத்த தென்ன லீலா.
மோகித்தேனே உன்னைக்கண்டு லீலா—என்னைச்
சோகத்தில் அமிழ்த்தினாயே லீலா.
காகத்தைப் போல் கூவிநின்றேன் லீலா—என்
தாகத்தைத் தணித்திடாயோ லீலா.
மலர்ந்த புஷ்பம் போன்றதொரு லீலா—நான்
உலர்ந்த சிறகானேனே உன் பிரிவால்.
தளர்ந்த மனத்தை அடைந்தேன் லீலா—உன்றன்
குளிர்ந்த முகம் காண்பதென்றோ லீலா.
கோட்டை யொன்று கட்டினேனே லீலா—அதில்
போட்டையே ஓர் கல்லெடுத்து லீலா.
தீட்டிய சித்திரம் போன்ற லீலா—எனை
வாட்டுதே மிகவும் துயர் லீலா.

2

காலை வேளையிலெங்கும் நந்தலாலா—உன்
நீலகமனி காணுதடா நந்தலாலா
சோலை வனங்களெங்கும் நந்தலாலா—உன்றன்
சோதி யொளி வீசுதடா நந்தலாலா.
பரந்த கடலினிடை நந்தலாலா—உன்றன்
சிறந்த சக்திகாணுதடா நந்தலாலா.
விரிந்த விசும்பினிடை நந்தலாலா—உன்றன்
விசித்ர சக்திதோன்றுதடா நந்தலாலா.
மலர்ந்த புஷ்பத்தினிடை நந்தலாலா—உன்றன்
மதுரக்குரல் ஓசை கேட்பேன் நந்தலாலா.
அலர்ந்த செந்தாமரையில் நந்தலாலா—உன்றன்
அழகிய முகத்தைக் காண்பேன் நந்தலாலா.

வர்த்தமானம்

இது வரை உலகத்தில் அதிகப்பணம் படைத்தவர் அமெரிக்கா தேசத்து "ராக்பெல்லர்" என்று இருந்தது. இப்பொழுது, போர்டு(Ford)கார் கம்பெனியின் முதலாளியாகிய ஹென்ரி போர்டு என்பவர் அவரைவிடப் பணக்காரராகி விட்டார் என்று சொல்கிறார்கள். 250 லக்ஷம் பவுன் வரி வகைக்காகக் கழித்த பின்னும் இந்தக் கம்பெனிக்கு $227\frac{1}{2}$ லக்ஷம் பவுன் வருமானம் கிடைத்ததாம். ஆகையால் கம்பெனியின் சொத்து 4440 லக்ஷம் பவுன் என்றும், ஹென்ரி போர்டுக்கு தினம் ஒன்றுக்கு லக்ஷத்து பதினாயிரம் பவுன் வருமானம் என்றும் ஏற்படுகிறது என இங்கிலீஷ்மென் பத்திரிகை வெளியிடுகிறது.

பரதகண்ட ஸாமந்த ராஜாக்களுடைய நாடுகளின் ராஜாங்க விஷயமாக ராஜத்ரோஹமான விஷயங்கள் ப்ரிடிஷ் இந்திய பத்திரிகைகளில் எழுதப்படுமானால், அவற்றையும் அவற்றின் பத்ராதிபர்களையும் தண்டிக்க ஏற்பாடுகள் செய்வதற்காக மசோதா ஒன்றை லெஜிஸ்லேடிவ் அஸெம்ப்ளியில் ஸர் வில்லியம் வின்ஸெண்ட் கொண்டுவர, அது அச்சபையாரால் அங்கீகரிக்கப்படாமல் தள்ளப்பட, ராஜப்ரதிநிதியவர்கள் இந்தியா கவர்ன்மெண்ட் சட்டம் 67-பி பிரிவின்படி அம்மசோதாவை மேலதிகார சபையாகிய கௌன்ஸில் ஆப் ஸ்டேட் என்னும் சபையில் பிரரேபிக்கும்படி ஸெர்டிபிகேட் அளிக்க, இதற்குள் கவர்ன்மெண்டாரும் சபையாரும் சேர்ந்து ஒரு மத்யஸ்தத்துக்கு வர முடியாது போய்ச் செவ்வாய்க்கிழமையன்று ஹானரபில் தாம்ஸன் அம்மசோதாவை கௌன்ஸில் ஆவ் ஸ்டேட்டில் அஸெம்ப்ளி அங்கத்தினரை அவமரியாதையாகத் தாக்கிப் பேசி பிரரேபிக்கக், கடைசியில் ஹானரபில் ரங்கஸ்வாமி அய்யங்கார் ஒருவர் மட்டுமே எதிர்த்து நிற்க அம்மசோதா ஆமோதிக்கப்பட்டது.

நாலுகோடி எழுபது லக்ஷம் தங்கமார்க்குகள் பெறுமான 1923 பெப்ரவரி மாதத்திய தவணை பாண்டுகளையும், பெல்ஜியம் ஆர்டருக்குச் செலுத்த வேண்டிய நாலு கோடித் தொண்ணூறு லக்ஷமார்க்கு பெறும்படியான 1923 மார்ச்சு மாதத்திய பாண்டுகளையும் ஜெர்மன் 'ரீச்ஸ்வங்கி' காரண்டி நிற்க ஜெர்மானியர்கள் இங்கலண்ட் வங்கிக்குக் கொடுத்ததாகத் தெரிகிறது.

துருக்கியில் தற்கால கவர்ன்மெண்ட் ராஜீநாமா கொடுத்துவிட்டதாகவும், கெமாலிஸ்ட் கக்ஷி கவர்ன்மெண்ட் ஏற்படுமென்றும், தற்போதைய ஸுல்தான் தள்ளப்பட்டு இளவரசர் ஸுல்தானாக வரலாமென்று செய்தி.

லார்ட் ஸெயிண்ட் டேவிட்ஸ் என்பவர் ஸ்மர்நாவிலிருந்து கிரேக்க சேனைப் புறங்காட்டியோடி வரும்போது இழைத்த கோர க்ருத்யங்கள் நிரம்பவும் கண்டிக்கத்தக்கன வெனவும், கேவலம் கார்ப்பண்யத்தால் ஊருராய் நகர் நகராய்த் தீயிட்டும் கொள்ளையடித்தும் துருக்கியர்கள் பலரை வேண்டுமென்று அகாரணமாய்க் கொலை செய்தும் இது முதலான பல அநியாயங்கள் இழைத்தனரெனவும், கெமால் பாஷா 'ஓட்டோமான்' ரயில் சிப்பந்திகள் சிலரைக்காப்பாற்ற எவ்வளவோ வசதிகளித்தனரெனவும், அவருக்கு ரெயில்வே கம்பெனியார் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்களெனவும் உபந்யாஸஞ் செய்தார்.

மூல்தானில் சமீபத்தில் முஹாரம் பண்டிகை நாட்களில் நடந்த ஹிந்து முகமதிய சச்சரவைப் பற்றிப்பண்டித மதனமோஹன மாளவியா என்பவர் இருதிறத்தாரையும் பார்த்து, 'நாம் அனைவரும் வெவ்வேறு மார்க்கமாயினும், வெவ்வேறு ஸமயங்களாயினும் கடைசியில் ஒரே ஈசுவரனைப்பல்வேறு வழியாய் உபாஸிக்கும் அண்டையயல் வீட்டுக்காரர்களைப்போல் ஸஹோதரப் பான்மையுடையவர்கள். நாம் எல்லோரும் மூல்தான் சம்பவங்களை முற்றிலும் மறந்து இனி அந்த த்வேஷங்களைப் பாராட்டாமல், உண்மையான ஸஹோதரபாவத்துடன் ஒத்துவாழ்தல் அவசியம்,' என்று பேசி, அமிருதஸரஸ் நகர்விஷயமாய் 'நாம் சண்டைசச்சரவில்லாமல் காப்பாற்றிக்கொள்ளத் தற்காப்புச் சங்கம் ஒன்று ஏற்படுத்துவது நியாயவிரோதமாகாது, அவ்விதம் ஏற்படுத்திக்கொள்வது இன்றியமையாததெனச்,' சொல்லி முடித்தார். ஹாகிம் அஜ்மால்கானும் மாளவியாவும் மறுபடியும் மூல்தான் சென்று இச்சச்சரவில் நஷ்டமுற்றவர்களுக்கு ஏதாவது உதவிசெய்தல் விஷயமாய் யோசனை செய்யப் போகின்றனராம்.

குரு-கா-பாக் ஸம்பவங்களைப்பற்றி விசாரிக்கக் காங்க்ரஸ் ஏற்படுத்திய விசாரணை பஞ்சாயத்துக்கு சென்னை மாஜி அட்வகேட் ஜெனரல் ஸ்ரீநிவாஸய்யங்கார் அக்ராஸனம் வஹிக்க அவர் அமிருதஸரஸ் நகருக்கு அக்டோபர் 1உ விஜயம் செய்து, இரண்டாம் தேதி விசாரணை துவக்கமாகும்.

கடற்படை ஸமாதானப்படி அமெரிக ஐக்ய கவர்மெண்டார் தங்கள் படைகப்பல்களைத் தகர்ப்பதை நிறுத்திவைத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் துருக்கி கிரேக்க நாடுகளின் தற்போதைய நிலைமையை யனுசரித்துச் சில நாட்டினர்கள் தத்தம் சண்டைக்கப்பல்களை உடைத்துத்தள்ளும் முறையில் மாற்றுதல் ஏற்படலாகும் என்ற பயம் தான்.

அர்த்த விசாரணை பஞ்சாயத்தார்கள் (Fiscal Commission) விசாரணைத் தீர்ப்பு ஏகோபித்த தீர்ப்பாயில்லாமல் அப்பஞ்சாயத்திலுள்ள இந்திய அங்கத்தினர்கள் தாங்கள் மைனாரிடி தீர்ப்பு எழுதியிருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவின் கைத்தொழில் வியாபாரம் விருத்தியடையும் பொருட்டு, ஆரம்பக் கைத்தொழில் உயிர்த்திருந்து விருத்தியடைவதற்கான தொழில் காப்புச்சுங்கம் இறுத்தல் (Protection) அவசியம் என்று அபிப்ராயப் படுகிறார்கள்.

சித்தரஞ்சன் தாஸ், அவர் மனைவி, அவர் மகள், அவர் மருமகன் ஸுதீராய், ஹைகோர்ட் ஜட்ஜ் பி. ஆர். தாஸ், அவர் மனைவி, இவர்கள் காஷ்மீருக்குப்போகும் வழியில் முர்ரி முஸதாபரியில் தங்கியிருக்கும்போது, காஷ்மீரத்து ராஜா சித்தரஞ்சன் தாஸு காஷ்மீரில் தங்கியிருக்குமட்டும், நேரிலாவது, இதர விதமாகவாவது ராஜியவிஷயமான ப்ரஸங்கங்கள் செய்யமாட்டேனென்று எழுத்து மூலமாய் எழுதிக்கொடுத்தாலொழிய காஷ்மீரத்தில் இருக்க அவருக்கு உத்தரவு அளிக்க முடியாது என்று கேட்க, அவ்வித உடன்படிக்கை எழுதிக்கொடுக்க அவருக்கு சம்மதமில்லாமல் அனைவரும் திரும்பிவிட்டார்கள்.

புயற் காற்று

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்த பாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும் அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பிவரும்போது புயற் காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்யாண காலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தரணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய, அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டு, வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்யாணத்திற்கு உடன்பட்டதும்; இராமேசன் கமலாவின் கதையை ஹேமநளினி முதலியவரிடம் பிரஸ்தாபியாதிருந்த காலத்தில் ஒரு நாள் சாயங்காலம் இராமேசனுக்குப் போட்டியாயிருந்த அக்ஷயன் இராமேசன் என்றொருவனுடைய மனைவி பெண்பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் வாசிப்பதாய் தன் சகோதரி சொன்னதாக அந்த பாபு வீட்டில் பிரஸ்தாபித்ததும் சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை)

கல்கத்தாவுக்கு வந்ததுமுதல் இராமேசன் கமலாவினுடைய கணவன் யார் என்று கண்டுபிடிக்க முயன்றான்; "தோபாபுகூர்" என்ற ஊர் எங்கு இருப்பது என்று அறிவதே அதிக சிரமமாயிருந்தது. பிறகு கமலாவிடமிருந்து தந்திரமாய் அந்த ஊரில் இருப்பதாக அறிந்துகொண்ட கமலாவின் சிற்றப்பனுக்கு காகிதம் எழுதினான். சென்ற சஞ்சிகையில் வரையப்பட்ட சம்பாஷணை நடந்த மறு நாட்தான் இந்தக்காகிதத்திற்குப்பதில் கிடைத்தது. கமலாவின் கணவனாகிய நளினாக்ஷனைப் பற்றிப் புயற் காற்றால் ஓடங்கள் கவிழ்ந்தபின்பு, தான் கேள்விப்படவில்லை என்று கமலாவின் சிறிய தகப்பனாரான தரணீசரணர் எழுதியிருந்தார். நளினாக்ஷர் ரங்கபுரத்தில் வைத்தியராக இருந்தார். அங்கே விசாரித்ததில் ஒன்றும் தெரியவில்லை. அவருடைய சொந்த ஊர் எது என்று தெரியாது என்றும் எழுதியிருந்தார் தரணீ சரணர்.

கமலாவின் கணவன் ஒருவேளை தப்பிப்பிழைத்திருக்கக்கூடும் என்று எண்ணியிருந்த எண்ணங்கள் இராமேசனைவிட்டு அகன்றன.

அதே தபாலில் வேறு சில காகிதங்கள் இராமேசனுக்குக் கிடைத்தன. அவனுடைய நண்பர்கள் பெரும்பாலரும் அவனுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருப்பதாகக் கேள்விப்பட்டு அந்த சமாசாரத்தைக்கேட்க் தங்களுக்கு அதிக சந்தோஷம் என்று தெரிவித்துக் கடிதங்கள் எழுதியிருந்தார்கள். அவர்களில் சிலர் எப்பொழுது எங்களுக்கு விருந்துச்சாப்பாடு என்று விசாரித்தார்கள். எங்களுக்கு இதைப்பற்றி இதுவரை தெரிவிக்காமல் ஒளித்து வைத்திருந்தாயே என்று சிலர் விளையாட்டாய்க் கண்டித்து எழுதியிருந்தார்கள். இந்தக் காகிதங்களை வாசித்துக்கொண்டிருக்கும்போது அந்தபாபு வீட்டுவேலைக்காரரில் ஒருவன் ஒரு காகிதம் கொண்டுவந்துகொடுத்தான். கையெழுத்தைப்பார்த்ததுமே இராமேசன் மார்பு படபடத்தது; ஹேமநளினி எழுதியதல்லவா? அக்ஷயன் இப்படிபேசியபிறகு அவளுக்குச் சந்தேகம் உண்டாகாமலிருக்குமா? அதைத் தீர்த்துக்கொண்டு அவன் சொன்னது சரியல்ல என்று கவலை தீர்ந்து இருப்பதற்காகவே இந்த காகிதத்தை எழுதி இருக்கவேண்டும்.

காகிதத்தைப்பிரித்துப்பார்த்தான் இராமேசன்; அவள் அதிகமாய் எழுதவில்லை: "நேற்று அக்ஷய பாபு எவ்வளவு கடூரமாய் பேசினான் உங்களைப் பற்றி? அதிருக்கட்டும். இன்று காலையில் ஏன் இங்கே வரவில்லை. வருவீர்கள் என்று எதிர்பார்த்திருந்தேன். அக்ஷய பாபு என்னசொன்னால் என்ன? அதை நினைந்து ஏன் வருத்தமடைகிறீர்கள்? அவனுடைய பைத்தியப்பேச்சு யொன்றையும் நான் காது கொடுத்துக்கேட்பதில்லை என்பது தெரியாதா? இன்று அதிசீக்கரமே வரவேண்டும். மத்தியான வேளையில் நான் தையல் வேலை ஒன்றும் செய்யப்போகிறதில்லை" என்று எழுதியிருந்தாள். இந்த சிலவசனங்களினின்று ஹேமநளினி தனக்காக எவ்வளவு வருத்தப்பட்டாள், என்பது விளங்கவே இராமேசன் கண்களில் நீர் ததும்பியது; முந்தின நாள் சாயங்காலம் இராமேசனுடைய மனதை அக்ஷயன் புண்படுத்தியதும் அவனுக்கு ஆறுதல் சொல்லி வருத்தத்தைப் போக்கடிக்க வேண்டுமென்று அவள் எவ்வளவு ஆசைப்பட்டாள் என்பதும் அந்த ஆவல் இராப்பொழுதெல்லாம் அவளை விட்டு அகலவில்லையென்பதும் பிறகு பொழுது விடிந்ததும் அதை அகற்ற முடியாமல் அவனுக்குத் தேறுதலாக இந்தக்கடிதம் எழுதத் துணிந்தாள் என்பதும் இராமேசனுக்கு நன்கு புலப்பட்டது.

உண்மையை அவளிடம் வெளியிடவேண்டும், இனி சொல்லாதிருக்கக் கூடாது என்று முந்தின நாள் சாயங்காலமே அவன் தீர்மானித்து இருந்தான். என்றாலும் எப்படி இதைப் பற்றி பிரஸ்தாபிப்பது என்பது இராமேசனுக்கு விளங்கவில்லை. இப்பொழுது அந்தப் பேச்சை ஆரம்பித்தால் கேட்பவர்களுக்கு கையும் களவுமாக அகப்பட்டுக்கொண்ட திருடன் தப்பித்துக்கொள்ள முயல்வது போல் அல்லவா இருக்கும். அக்ஷயனுக்கும் அது ஒரு ஜயமாக ஏற்படும் என்று நினைக்கவே, அந்த அவமானத்திற்கு இடங்கொடுக்க தைரியம் வரவில்லை இராமேசனுக்கு.

கமலாவின் கணவன் இராமேசன் என்று பெயர் கொண்ட வேறு ஒருவனாகத்தான் இருக்கவேண்டும் என்று அக்ஷயன் நினைக்காவிட்டால் இப்படி ஜாடையாய் மட்டும் சொல்லிவிட்டுச்சும்மா இருக்கமாட்டான். உளவைக் கண்டுபிடித்து விட்டேன் என்று பறையடிப்பான் அல்லவா,' என்று நினைத்து இராமேசன் உண்மையை உள்ளபடி உடனே சொல்லிவிடுவது என்ற நேரானவழியை விட்டுவிலகி "இப்போது ஒருவாறு சமாளித்துக்கொள்வோம்; பின்பு தகுந்த சமயம் பார்த்து உண்மையை வெளியிடுவோம்" என்று நிச்சயித்தான்.

இந்த சந்தர்ப்பத்தில் தபால்காரன் வேறொரு காகிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். அதை இராமேசன் பிரித்துப் பார்த்தான்; அது கமலா வாசிக்கும் பள்ளிக்கூடத்து தலைமை உபாத்தியாயினி எழுதியது; தான் மட்டும் பள்ளிக்கூடத்திலேயே விடுமுறை காலத்திலும் இருக்கவேண்டும் என்று கேட்டது முதல் கமலா வக்கம் பிடித்திருப்பதால் அவளை அங்கே வைத்திருக்க முடியாது என்றும் பள்ளிக்கூடம் சனிக்கிழமை மூடுவதால் அன்றே கமலாவை வீட்டிற்கு அழைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் அந்தக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

சனிக்கிழமை கமலா வீட்டிற்குத் திரும்ப வருவது; ஞாயற்றுக்கிழமைதான் ஹேமநளினியைக் கல்யாணம் செய்து கொள்வது; எப்படி இருக்கிறது காரியம்!

"இராமேசபாபு, மன்னிக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு வந்தான் அக்ஷயன்; இந்த சமயத்தில் "நீர் இப்படி நான் விளையாட்டாய்ச் சொன்னதற்குக் கூடக் கோபித்துக் கொள்வீர் என்று தெரிந்தால் நான் வாயைத் திறந்திருக்கமாட்டேன். சாதாரணமாய் விளையாட்டுப் பேச்சில் ஏதாவது கொஞ்சமேனும் வாஸ்தவம் கலந்திருந்தால் கோபித்துக்கொள்வது வழக்கம்; நான் பேசினதிலோ ஓர் அணுக்கூட உண்மைக்கிடமில்லையே! அப்படியிருக்க உமக்கு ஏன் இப்படிக் கோபம் வந்தது என்று எனக்கு இன்னும் விளங்கவில்லை. நேற்று முதல் அந்நதபாபு இதற்காக என்னை வைகிறார். ஹேமநளினியும் பேசமாட்டேன் என்றிருக்கிறாள். இன்று காலையில் நான் அவர்களைப்பார்க்கச் சென்றதும் சரேல் என்று அவள் உள்ளே போய்விட்டாள். ஏன் இப்படி என் மீது எல்லோருக்கும் வருத்தம்?"

"அதை யெல்லாம் இப்போது உம்மிடம் சொல்லி முடியாது; சொல்லவும் எனக்கு அவகாசமில்லை, மன்னிக்கவேண்டும்" என்றான் இராமேசன் கண்டிப்பாய். "ஓகோ! கல்யாண அவஸரமா? பாண்டு (band)க்காரன் காத்திருக்கிறான் போலிருக்கிறது; என்னுடன் பேச ஒழியவில்லை. சரி, எனக்கும் காலதாமதப்படுத்த இஷ்டமில்லை! போய்வருகிறேன்."

அக்ஷயன் போனதும், இராமேசன், அந்நதபாபுவின் வீட்டிற்கு விரைந்து சென்றான்; அவன் சீக்கிரமே வருவான் என்று எதிர்ப்பார்த்து அவன் வரவை நோக்கிக் காத்திருந்தாள் ஹேமநளினி; அவளருகில் மேஜையில் அவள் சித்திர வேலை செய்ததுணி மடித்துக் கிடந்தது; அவள் பக்கத்தில் 'ஹார்மோனியம்' வைக்கப்பட்டிருந்தது; வழக்கமாய்ப் பாடும் பாட்டை எதிர்பார்த்திருந்தாள்; மெய்தான்; ஆனால் அவள் எதிர்ப்பார்த்தது வழக்கமாய்ப் பாடும் பாட்டுமட்டும் அல்ல. மெல்லிய இனிய த்வனியுடன் இருதயத்தில்மட்டும் ஒலிக்கும் வேறொரு திவ்ய கானத்தையும் அவள் எதிர்ப்பார்த்து இருந்தாள் அல்லவா?

இராமேசன் தன்னறை புகுந்ததும் ஒரு மெல்லிய புன்னகை அவள் முகத்தில் பிரகாசித்தது. ஆனால் வரும்போதே "உன் தகப்பனார் எங்கே?" என்று இராமேசன் கேட்டதும் ஒரு நொடியில் அவளுடைய மெல்லிய புன்னகை மறைந்தது.

"அவர் அறையில் இருக்கிறார்; ஏன், என்ன வேண்டும்? சற்றுநேரத்துக்குள் இங்கே "டீ" சாப்பிட வருவாரே?"

இராமேசன்: "இல்லை; உடனே பார்க்கவேண்டும், அவசரகாரியம்."

ஹேமநளினி "அப்படியா. ஆனால் அவர் அறைக்கு—"

இதற்குள் இராமேசன் மறைந்துவிட்டான். அவசரமா, அவ்வளவு அவசரமா எல்லாம்! இந்தக் காதலும் காத்திருக்கவேண்டுமோ, இன்பக்கோட்டையின்கதவு மூடப்பட்டது போலிருந்தது அன்று ஹேமநளினிக்கு. நாற்காலியை ஆர்மோனியத்தினின்றும் இழுத்துக் கொண்டு துணியை எடுத்துத்தைக்க ஆரம்பித்தாள். கண்ணுக்கு தென்படாதவேறொரு ஊசி அவளுடைய இருதயத்தைக்குத்திக்கொண்டிருந்தது; இராமேசன் பேசச்சென்ற அவசர சமாசாரம் வெகு நேரம் பிடித்தது; காதல் காத்து இருந்தது.

இராமேசன் அந்நதபாபுவின் அறையுள் நுழைந்ததும் அங்கே, ஒரு சமாசாரப்பத்திரிகை முகத்தை மறைத்திருக்க, அவர் தூங்குவதைக் கண்டான். இராமேசன் சற்று கனைத்து இருமியதும் அவர் திடுக்கிட்டெழுந்து "இராமேசா! சீதபேதி ஊரில் அதிகமாய் இருக்கிறது, தெரியுமா?" என்று பத்திரிகையைச் சுட்டிக்காட்டினார்.

இராமேசன் விஷயத்தை உடனே அறிவிப்பவனாய்,

"கல்யாணத்தைக் கொஞ்சநாள் ஒதுக்கி வைக்கவேண்டும். எனக்கு அவசரமான ஜோலியிருக்கிறது." என்றான்; இதைக் கேட்டதும் கல்கத்தாவின் மரணவிவர ஜாப்தாமுற்றும் மறந்து அந்நதபாபு திடுக்கிட்டவராய் இராமேசனைப் பார்த்துத் திகைத்து விழித்தார். "இதென்ன இராமேசா, அழைப்புக் காகிதங்கள்கூட எழுதியாய்விட்டதே."

"அதற்கடுத்த ஞாயிற்றுக் கிழமைக்குக் கல்யாணத்தை ஒதுக்கிவைத்திருக்கிறது," என்று மறுபடியும் இன்று எழுதி விடுவோம்!

"இதென்ன பேச்சு, இராமேசா? உங்கள் கோர்ட்டு கேஸ் போலவா இது, உனதிஷ்டப்படி ஒதுக்கிவைத்துக் கொள்ள? அப்படி என்ன அவசரமான காரியம் உனக்கு?"

இராமேசன் "ஆமாம், வெகு அவசரமான காரியம், அதைத் தள்ளிவைக்க முடியாது."

சுழற்காற்றால் வீழ்த்தப்பட்ட பெருமரம்போல் நாற்காலியில் அப்படியே சாய்ந்து விட்டார் அந்நதபாபு.

அந்நதபாபு "கல்யாணத்தை ஒதுக்கி வைக்க முடியாது. சரி! உன்னிஷ்டப்படி செய்; நீதான் நாங்கள் அழைத்திருக்கும் விருந்தாளிகளுக் கெல்லாம் ஜவாபு சொல்ல வேண்டும். என்னையாராவது ஏன் என்று கேட்டால், எனக்கும் ஒன்றும் தெரியாது. மாப்பிள்ளைக்குத் தெரியும் அவனுடைய காரியம். அவனைக் கேட்டால் சொல்வான் எப்போது கல்லியாணத்திற்கு சௌகரியப்படும் என்று"

இராமேசன் பூமியையே உற்று நோக்குபவன் போல் தலை குனிந்து நின்றான். "ஹேமநளினியிடம் சொல்லியாய் விட்டதா" என்றார் அந்நதபாபு.

"இல்லை; இன்னும் அவளுக்குத் தெரியாது."

அந்நதபாபு "உடனே அவளிடம் சொல்ல வேண்டாமா, அவளுக்கும் தானே கல்யாணம்"

இராமேசன் "இல்லை, முதலில் உம்மிடம் சொல்லிவிட்டு—"

'ஹேமா, ஹேமா,' என்றார் அந்நதபாபு; என்ன அப்பா, என்று ஹேமநளினி உள்ளே வந்ததும் அந்நதபாபு, 'இராமேசனுக்கு ஏதோ அவசரமான அலுவல் இருக்கிறதாம். கல்யாணம் செய்துகொள்ள இப்போது ஒழியாதாம்' என்றார். ஹேமநளினியின் முகம் வெளுத்தது; அவளது கண்கள் இது என்ன என்று கேட்பனபோல் இராமேசனை நாடின; கையும் களவுமாய்ப் பிடிக்கப்பட்ட குற்றவாளிகூட இராமேசனைப்போல் திகைத்து நிற்கமாட்டான். இப்படி யாதொரு பீடிகையுமின்றி திடும் என இதைப்பற்றி ஹேமநளினி அறிவிக்கப்படுவாள் என்று அவள் ஸ்வப்னத்திலும் எண்ணவில்லை. இப்படி அறிவித்தது அவளுக்கு எவ்வளவு

வருத்தத்தைக் கொடுத்திருக்க வேண்டுமென்று அவன் மனதுக்குத் தெரியாதோ? ஆயினும் தொடுத்து விடுத்த பாணம் திரும்பவருமா? இந்த பாணம் ஹேமநளினியின் மனதைப் பிளந்துவிட்டது என்று இராமேசன் அறிந்தான்.

இப்பொழுதோ உண்மையை ஒருமாதிரி மழுப்புவதற்கு இடமில்லை. "இனி என்செய்வது?" கல்யாணமோ ஒதுக்கிவைக்கப் படவேண்டும்; இராமேசனுக்கு அவசரமான வேலை, ஒதுக்கிவைக்க முடியாத வேலை; என்னவேலை என்பதை வெளியிட்டுச் சொல்லவும் முடியாது; எப்படி மழுப்பிப் பேசுவது ?

"சரி, உங்கள்பாடு,நீங்கள் இரண்டு பேருமாய்த் தீர்மானியுங்கள்" என்றார் அந்நதபாபு ஹேமநளினியிடம் ;

"எனக்கு ஒன்றும் தெரியாது, அப்பா."

அஸ்தமன சமயத்தில் இருண்ட மேகங்களின்மீது விழும் மழுங்கிய கிரணங்கள் போன்ற தன் நயனங்களால்ஏறிட்டுப் பார்த்தாள் ஹேமநளினி; பிறகு அவ்வறையை விட்டு வெளிச் சென்றாள்.

அந்நதபாபு சமாசாரப் பத்திரிகையை கையில் எடுத்துக்கொண்டு வாசிப்பவர்போல் பாசாங்குசெய்து யோசனையில் ஆழ்ந்து இருந்தார்; இராமேசன் இரண்டொரு நிமிஷம் மௌனமாய் இருந்தான்; பிறகு திடீரென எழுந்து வெளியே சென்றான். வெளியில் எல்லாரும் உட்கார்ந்து பேசும் அறைக்கு வந்ததும் அங்கே ஜன்னல் வழியே தெருவை உற்று நோக்கிக் கொண்டு ஹேமநளினி மௌனமாய் நிற்பதைக் கண்டான். அப்போது சரத்காலத்து சாயங்கால வெயிலில் அசைவற்றுப் படம்போல் விளங்கிய அவளது உருவம் என்றும் அவன் ஞாபகத்தினின்றும் அகலாததல்லவா?மிருதுவாய் வளைந்து விளங்கிய அவளது கபோலத்தின் வடிவும் கூந்தலை அவள் அலங்கரித்து வாரிப் பின்னிமுடிந்திருந்தவிதமும், கட்டுக்குள்ளடங்காமல் அவளுடைய கழுத்துப் புறத்தில் பரந்த தலை மயிரும், அவை யிடையே பொன்னொளி வீசி விளங்கிய அவளது கண்டஸரமும் அவளுடைய இடது தோள்மேல் அழகுறப்புனைந்திருந்த பட்டாடையும் ஆகிய எல்லா விவரங்களும் அவனுடைய மனதில் அப்படியே பதிந்தன.

மெதுவாய் அவளருகிற் சென்றான் இராமேசன். தன் காதலன் வரவைச் சற்றும் கவனிக்காமல்தெருப் பக்கத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள் ஹேமநளினி. இராமேசன் பேசத்தொடங்கும்போது அவன் மொழி தடதடத்தது. "உன்னைக் கெஞ்சிக்கேட்டுக்கொள்கிறேன்," என்றான்.

இராமேசனின் மனத்துயரத்தை இதினின்றும் உணர்ந்த ஹேமநளினி அவன் புறமாய் திரும்பினாள். "என்மேல் சந்தேகப்படாதே, எப்பொழுதும் என்ன நேர்ந்தாலும் என்னை சந்தேகிப்பதில்லை என்று வாக்குக்கொடு. என்னிடம் வைக்கும் நம்பிக்கைக்கு விரோதமாய் நான் ஒன்றும் செய்வதில்லை என்று சத்தியமாய் சொல்லுகிறேன். கடவுள் சாக்ஷியாக, உனக்கு ஒரு பிழையும் இழைக்காமல் நடந்துகொள்கிறேன்," என்று இப்படி மனம்விட்டு ஹேமநளினியிடம் சுவதந்திரத்துடன் அந்தரங்கமொழிகள் இதற்குமுன் இராமேசன் பேசியதில்லை.

மேல் வார்த்தை ஓடவில்லை இராமேசனுக்கு ; அவன் இரு விழிகளிலும் கண்ணீர் ததும்பி நின்றது.

ஹேமநளினியின் மனம் உருகிவிட்டது. அவன் முகத்தை உற்றுநோக்கவே அவளது கண்ணீரும் பெருகிக் கபோலங்களில் வழிந்தது. இப்படியாக அந்த ஜன்னல் அருகில் அவர்கள் தனித்து நிற்கும்போது அவர்கள் இருவரின் கண்களும் சந்தித்தன. வாய் வார்த்தையாடாவிடினும் அவர்கள் இருதயங்கள் இரண்டும் தத்தளிப்பு ஒழிந்து, சாந்தம் நிறைந்து, இன்புற்றனவென்பதும் அந்த இன்பம் அவர்களுக்கு சுவர்க்காநுபவம்போல் இருந்தது என்பதும் சொல்லவேண்டுமோ ?

துயரபாரம் நீங்கவே, இராமேசன் ஆறுதலுடன் பெருமூச்சு விட்டுக்கொண்டே, "நான் ஏன் இன்னொருவாரம் கல்யாணத்தை ஒதுக்கிவைக்க வேண்டுமென்று கேட்கிறேன் தெரியுமோ?" என்றான். ஹேமநளினி தலையை அசைத்தாள். அந்த விஷயம் தனக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை என்று. "எல்லாவற்றையும் நம்முடைய கல்யாணம் முடிந்ததும் விஸ்தாரமாய்ச் சொல்கிறேன்," என்றான் இராமேசன். "கல்யாணம்" என்றதும் அவளுடைய கன்னங்கள் சற்று சிவந்தன.

அன்று மத்தியானத்தில், ஹேமநளினி, இராமேசன் வரவை எதிர்பார்த்து நின்றபோது எவ்வளவோ உல்லாசமாய் எல்லாவிஷயங்களைப்பற்றியும் பேசப்போகிறோம், கல்யாணமான பின்பு எப்படிச்சுகமாய் இருக்கப்போகிறோம் என்று காட்டுவதுபோல் இன்பமாய்ச் சல்லாபம் பண்ணுவோம், மேல் நடக்கவேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி எவ்விதம் ஒருவரோடொருவர் யோசனைசெய்து தீர்மானிப்போம் என்று எல்லாம் எண்ணியிருந்தாளே யொழிய இவ்வாறு சில நிமிஷங்களுக்குள் மனஸ்தாபமடைந்து உடனே இருவரும் கண்ணீர் வடித்து ஒருவரையொருவர் சந்தேகிப்பதில்லை, ஒருவருக்கொருவர் உண்மையாய் நடந்துகொள்வது என்று வாக்குக்கொடுத்து வேறுபேச்சு ஓடாமல் மௌனமாய் இருப்போம், அப்போது இருவருக்கும் இன்பமும மன அமைதியும் நம்பிக்கை முதிர்ச்சியும் ஏற்படும் என்று அவள் சற்றேனும் எதிர்பார்த்திருப்பவளா? சற்று நேரமானதும்,ஹேமநளினி, "உடன் அப்பாவை நீங்கள் போய்ப்பார்க்க வேண்டும், அவர் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்," என்றாள்.

ஊரார் என்ன இழிவாய் மனதைப் பிளக்கும்படியாய்ப் பேசினாலும், அதற்குத் தயாராய் உத்சாகத்துடன் புறப்பட்டான் இராமேசன்.

பாரதகண்ட புராதனம்.

[வெ. கா. ராமநாதன், பி.ஏ., பி.எல்.]
(22-ம் பகுதியினின்று தொடர்ச்சி)

நமது பாரதகண்டம் மாத்திரம் மேற்கூறிய பொதுவிதிக்கு விலக்காகத்தோன்றுகிறது. பிராமணர்கள் இயற்றியுள்ள எல்லையற்ற ஸாஹித்ய க்ரந்தங்களில் பொதிந்து கிடக்கும் இந்தியாவினுடைய கல்வி கேள்விகளாற் களைக்கொண்டு அதனைச் சுற்றியிருக்கும் இதர நாடுகளினுடைய விஷயங்கள் ஒன்றும் அறியக் கூடியதாகக் காணப்படவில்லை. இந்நாட்டின் அமைப்பே இவ்வித ஏகாந்த நிலைமைக்குக் ஏற்றதாக இருக்கின்றது. வடக்கில் இமயமலையும், இருமருங்கிலும் இரண்டு மஹா சமுத்திரங்களும், கண்டத்துக் குள்ளேயே உத்தர பாகத்திலிருக்கும் வனந்தர ப்ரதேசமுமாக யாவும் ஒன்று கூடிக் காற்று புகவொட்டாதபடி மூடியிருக்கும் "வ்ஸா"வைப்போன்ற இந்நாட்டில் இயற்கைத் தவியானவள் தன் மனதுக்கியைய லோகோ

பதாரார்த்தமான சில நூதன விஷயங்களைப் பரீக்ஷித்து அறியும் வண்ணம் ஓர் ஆராய்ச்சி சாலை நியமித்துக் கொண்டனள் போலும். அதற்கேற்ற வாறு அமைந்திருக்கின்றது ஜன ஸமூக ஏற்பாடும். ஜாதி வித்யாஸக் கோட்பாட்டின் மகிமையால் வெளி நாட்டோர் எத்தனை நூற்றாண்டுகள் இவ்வூரில் தங்கியிருப்பினும் ஸ்வதேசத்தாரோடு ஐக்யமாவது இயலாத கார்யம். இஜ் ஜாதி வித்யாஸக் கோட்பாடு இந்தியாவைச் சுற்றி எழுப்பப்பட்ட பிரம்மாண்டத்தை யொட்டி நிற்கும் மதிலைப்போன்றதாகும் இதன் பலன், இந்தியாவின் சொந்த ஜன சமூகத்தை ஒரு பேரிட்டு, அவர்களுடைய உண்மை ஸ்வபாவத்தை யெடுத்து விவரிப்பது அசாத்தியமான கார்யமாயிருக்கின்றது; ஜன சமூகக்கோட்பாட்டில் இந்தியாவை ஏகோபித்துக் கூற முடியவில்லை. இவர்களுடைய கட்டுப்பாடும் இயற்கையும் வேறு எந்நாட்டினருடனும் ஒப்புக் கூறத்தக்கதாயில்லை. பாஷைத் துறையிலோ ஜாதி பேதங்களைக் காட்டிலும் எண்ணிறந்த பாஷைகளையுடையது இந்நாடு. ஆயினும், இந்தியாவை எவ்வித ஏகபாவமுமில்லாத நெல்லிக்காய் மூட்டை யெனக் கூறுவது பொருந்துமா? பூகோள சாஸ்திரத்தின்படி மாத்திரமே இதை ஒரு கண்டமெனக் கூறலாம்; இந்நாட்டினருக்கு வேறெவ்வித கல்வி கேள்வி, நாகரிகமாதி யொற்றுமை யொன்றுங் கிடையாது என்று யார் சொல்லத் துணிவார்கள்?

ஒரு பொது லக்ஷ்யமும், ஸர்வ ஜன சம்மதமான கொள்கை யொன்றும், ஒரு பொதுவான மூல பாஷையும், அனைவரும் போற்றும் ஸர்வ ஸமய ஸம்மதமான க்ரந்தங்களும், தம்முள் வேறு வேறாகிப் பிரிதற்கு இயலாத 'பரத கண்ட நாகரிகமொன்று' உளதென்பது உலகத்தோரெல்லோரும் அங்கீகரித்த உண்மையாகும். ஆஸேது ஹிமாசல பர்யந்தம் பண்டிதர் பாமரர் சகலரும்—சம்சாரபந்தம் பந்தவிமோசனம், கர்மதாயங்கள், அக்கர்மங்களின் பயனாக ஏற்படும் பிறவிகள் இத்யாதி முக்ய கொள்கைகள்கொண்ட ஸநாதன தருமத்தையும், மனுஷ்யர்களும் இதர ஜீவஜந்துக்களும் யாவும் நசிக்கும்தன்மையன, பூலோகமனைத்தும் கேவலம் மாயாஸ்வரூபம் என்ற தத்வத்தையும், கற்றோர் மற்றோர் யாவரும் முழுமனதுடன் நம்பினவர்கள். சுமார் மூன்று நான்கு ஆயிரவருஷங்களாக தேவர்கள் பாஷையாகிய 'ஸம்ஸ்க்ருதம்' நாட்டுப் பாஷைகளுள் நடுநாயகமாய் விளங்காநிற்கின்றது. உயர்நடையிலும், இனிமையான கவித்திறத்திலும், உயரிய எண்ணங்களிலும் இதரர்களுக்கு இன்னும் வழிகாட்டிகளாக விளங்குகின்றனர், வியாஸர், வால்மீகி, காளிதாஸர் முதலியவர்கள்.

ஆயினும் பரதகண்டம் இங்லண்ட், பரான்ஸ் ஜேர்மநி இத்தேசங்களைப்போன்றதொரு 'தேசம்' (Nation) அன்று.

இத்தகைய உந்நத நாகரிகம் பொருந்தி விளங்குவதாயினும், இந்தியா ஒரு தேசம் அல்லது 'நேஷன்' ஆகாது. 'நேஷன்' என்னும் பதவியைப் பெறுதற்கு நாகரிகம் மாத்திரமே போதாதென்னும் உண்மைக்கேற்ற உதாரணமாய் நிற்கின்றது. இந்நாடும் அவ்வித 'நேஷன்' எனப்படுவதற்கு இந்தியா ஏன் அர்ஹமானதன்று என்ற காரணம் தெரியவேண்டுமானால், இந்தியாவை கிரீஸ், ரோம் நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தறியலாம். அவ்வாறு பரீக்ஷிக்கும்போது ஒரு குறைவு இந்தியாவுக்கு இருப்பதாகவும், அதனால் தான் அது தன்னுள் ராஜாங்க ஒற்றுமையற்று 'இங்க்லண்ட்' 'ப்ரான்ஸ்' இந்நாடுகளைப்போல் 'நேஷன்' பதவியை யடையவில்லை யென்று ஏற்படுகிறது. பிரதி மனிதனுக்குப் போலவே பிரதி நாட்டினுக்கும் எல்லா அங்கங்களுக்கும் யஜமானஸ்தானம் வஹித்து நிற்கும் ஒரு மனது, மூளை அல்லது புத்திஸ்தானம் என்னும் உயரதிகாரி யொன்று இருப்பது அவசியம். பொது ஜன சமூகத்தையொட்டியே ஸகல யோசனைகளும், அலுவல்களும் ஒன்று சேர்ந்து ஆலோசிக்கப்பட்டு அந்த ஆலோசனையின் பலனாக அவ்வவ்வங்கத்திற்கும் உத்தரவு கொடுக்கும் ஓர் அதிகாரி யில்லாமல் எக்காரியமும் செவ்வனே நடைபெறாது. பிரதி பாகத்திற்கும் ஏற்படும் நன்மை தீமைகளும், சுகதுக்கங்களும், கஷ்டநஷ்டங்களும் யாவும் அத்தலை நகரில் பதிவாகி அவற்றால் இதர அங்கங்களுக்கு ஏற்படக் கூடிய சாதக பாதகங்கள் தீரத்தெளியவே யோசித்தாகவேண்டும்.

பல்வேறு நகர்களாகச் சிதறிக்கிடந்த க்ரீஸ் நாட்டிற்குத் தலைநகராக நின்று காப்பாற்றியது 'ஆதன்ஸ்' பட்டணமே. ஆதன்ஸ் சரித்திரமொழிய க்ரீஸ் சரித்திரங் கிடையாது. அதலாந்திக மஹாஸமுத்ரம்தொட்டு பஸ்ராவரை வியாபித்துக் கோலோச்சிய ரோமாபுரி ராஜ்யத்துக்கு அதன் தலைநகராகிய ரோமாபுரியே உயிர்நிலையாக ராஜ்யத்தை இயக்கிக்கொண்டிருந்தது. ரோமராஜ்ய சரித்திரமென்றால் ரோமபுரி சரித்திரமே. அவ்வாறேயாகும் தற்காலத்தில் லண்டன், பாரிஸ் நகர்களும். இவ்வித நடுநாயக நகரம் இந்தியாவில் உளதோ? காசி அல்லது வாராணசியென்னும் புண்யக்ஷேத்ரத்தை அவ்வித பதவியளித்துத் தலைநகரெனக் கூறலாமோ? அப்படியாயின் காசி எந்நாளில் ராஜாங்கத் தலைநகராய் விளங்கியது? பாதலீபுத்ரம், கந்யாகுப்ஜம், உஜ்ஜயிநி, புஷ்களாவதி, பிரதிஷ்டானம் காரணம் முதலிய எல்லா நகர்களும் சிற்சில காலமே பொலிவுற்று விளங்கிச் சரித்ரக்காரர் கண்ணில் படுமுன் நசிக்கலாயின.

பரதகண்ட சரித்ரம் என்பதொன்றுண்டோ

இந்தியாவுக்கு—புராதன இந்தியாவுக்குச் சரித்ரம், அந்நாட்டினர் ஒருவரும் எழுதிவைக்கவில்லையென்று திடமாகச் சொல்லலாம். ஒரு குடும்பத்தில் பெரியோர்களுடைய பவித்ர சரித்திரங்களும், சின்னங்களும் எவ்வளவு ஆசையுடனும் கருத்துடனும் ஜாக்ரதையாய்ப் பாதுகாக்கப்பட்டு வருகின்றனவோ அவ்வாறே பிரதி நாட்டினரும் தத்தம் பூமியில் அவதரித்த மஹான்களுடையவும், கீர்த்தி ஸம்பந்நர்களுடையவும் பெருமைகளை விளக்குவதான உண்மை சரித்ரங்களையும் அவர்களுடைய ஞாபகார்த்த அறிகுறிகளையும் பேணுவது உலகதர்மம். அத்தகைய புகழுடம்பு எய்தியவர்களின் சரித்ரங்களும், அவர்களுடைய உத்தம லக்ஷணங்களும், குணதிசயங்களும், அவர்களுடைய யுக்தி சாதுர்யங்களும் பின் காலத்தினருக்குப் பெரிதும் பயன்படும்படி அவைகளைக்காலமாகிய ஸாகரத்தில் அமிழ்ந்துக் கண்ணுக்குக் காணாதபடிப் போகவொட்டாமல் ஆதரவுடன் காப்பாற்றி என்றென்றைக்கும் அவர்களுடைய பவித்ர வாழ்க்கை சரித்ரம் நசித்துப் போக வொட்டாமல் சிலையிலெழுத்துபோல் சாசுவதமாய் உண்மையை விளங்கச் செய்வது பிரதி நாட்டினருக்கும் தம் தாய் நாட்டுக்காகச் செய்யவேண்டிய பிரதம கடமையன்றோ? பரத கண்டத்தில் எத்தனையோ பெரியோர்களின் நாமதேயங்களும்கீர்த்திப்பிரதாபங்களும்இன்றைக்கும்

வழங்கிவருகின்றன என்பது வாஸ்தவமே. எனி
னும் எவ்வாறு வழங்கிவருகின்றன? அவர்களு
டைய, அத்தகைய கவீசுவரர்களுடையவும் மதா
சாரியர்களுடையவும் உண்மையான ஜீவ்ய சரித்திர
ங்களும், அவர்கள் வசித்த காலமும் யாருக்குந் தெ
ரியாது. அவர்களுடைய ஞாபகத்தை மறக்காமல்
அவர்களுடைய சரித்திரத்தைமாத்திரம் பல கட்
டுக்கதைகளுக்குட்படுத்தி ஒன்றுக்கொன்று பொ
ருந்தாத பல பாட்டிக் கதைகளுக்கெல்லாம் ஆளா
க்கி விட்டனர். இதுவோ அப்பெரியோர்களையும்
அவர்கள் நாமதேயங்களையும் நாம் உபாஸிக்கும்
விதம்? ஜெர்மானிய நாட்டிலவதரித்த மதாசாரியர்
லூதருக்குச் சமானமான சங்கர பகவத் பாதாள்
இந்நாட்டில் வசித்துளர். அவருடைய காலத்
தைப்பற்றி நாம் அறிந்ததெல்லாம். கி.பி. முதல்
ஆயிரஆண்டுகளிலோ அல்லது இரண்டு மூன்று
ஆயிர மாண்டுகள் முன்னரோ இருந்திருக்கவேண்
டுமென்று நாம் திட்டமாய்ச் சொல்லக் கூடிய
தே. அவர்மீது சுமத்தப்படும் கதைகள் பல
உண்மையாயிருக்கக் கூடியவையல்ல. மஹா உத்
தம புருஷர், அவதார புருஷரென்றே சொல்ல
வேண்டும். அவரால் ஹிந்துமதம் எவ்வளவோ
நன்மையைப் பெற்று விளங்குகிறது. வேதாந்த
சாஸ்திரத்தை நிலைநிறுத்தி இப்பூவுலகத்துக்குக்
கைம்மாறில்லாத நன்மையைப் பயந்தவர். அப்
பேர்ப்பட்டவருடைய ஜீவ்ய சரித்திரம் நமக்குச்
சரியாய்த் தெரியா தென்பதை விடவேறென்ன
மானக்கேடுவேண்டும்? கவிகளுக்குள் நிகரற்று
விளங்கும் காளிதாஸர் சரித்திரத்தைப்பற்றிய
உண்மையாவது தெரியுமோ? விக்ரமாதித்யன் கா
லத்திலா போஜராஜன் காலத்திலா அவர் உயிர்த்தி
ருந்தது. இந்தச் சரித்திரங்களுக்குப் பதிலாகப்
பாண்டவர்கள், ஸ்ரீராமர் இவர்களுடைய திவ்ய
வரலாறு நமக்குக் கிடைத்திருக்கிறது. ஸ்ரீராம
ருடையவும் பாண்டவர் களுடையவும்
கதைகளை எழுதிய தேசத்தாரது சாமார்த்யம்
இணையற்றது என்பதற்கு ஐயமே கிடையாது. நா
டோறும் சிரவணம் செய்தாலும் சலிக்காத அவர்
களுடைய உதாரணங்கள் பெரிதும் போற்றற்
பாலன. என்றாலும், உண்மை சரித்திரம் என்
பது இத்தேசத்துக்குக் கிடையாது. இன்னொரு
அதிசயம். இந்திய மஹான்கள் பலரைப்பற்றி நாம்
அறிந்துள்ள கொஞ்சநஞ்ச சரித்திரமும் நமக்கு
இதர நாட்டினர்கள் மூலமாய்த் தான் தெரியவந்
தது.

(இவ்வாறு சொல்வது முற்றும் சரியோ, அல்ல
வோ, அந்தக் கேள்வியைப்பற்றி வாசகர்களுக்கு
அபிப்பிராய பேதமிருக்கக்கூடும்) இவ்வாறு நமது
பெருமையை நாம் அறியாமல் இதர நாட்டினர்க
ள் நமக்குச் சுட்டிக் காண்பிப்ப தென்பது என்ன
மானக்கேடு! சீனம், ஜப்பான், கொரியா, லங்கை
இந்நாட்டினர்கள் அவாவுடனும் உள்ளன்புடனும்
நெகிழ்ந்துருகி உபாஸிக்கும் ஸ்ரீ புத்தமகானுபாவ
ருடைய ஜன்ம பூமி பரதகண்டமே. அவரைப்பற்றி
நமக்கு எள்ளளவாயினும் தெரியுமோ? அவரைப்
பெற்றெடுத்த பாக்யம் தவிர, அவரைச்
சீராய் வளர்த் தெடுத்த பாக்கியம் இந்தியாவுக்குக்
கிடையாது. ஆனால அவர்மதத்தை விரட்டியோ
ட்டிய பாக்கியம் பெற்றது பரதகண்டம். புத்
தருடைய ஜன்மபூமி இந்தியாவென்றும் அவரு
டைய சரித்ரத்தை இந்தியருக்கு எடுத்துக் காட்டி
யதும் ஐரோப்பிய பண்டிதர்கள் தான. (அபிப்ராய
பேதம் உண்டு.)

பரதகண்டத்தில் செங்கோல் நடத்திய சக்ரவர்
த்திகளுள் மஹா பெரியவர் அசோகசக்ரவர்த்தி.
அவர் நாடு வடமேற்கில் பாரஸீகத்து எல்லை
தொட்டு, தெற்கே நெல்லூர், தென்பெண்ணை
வரைக்கும், கீழே அஸ்ஸாம் பர்மா முழுதும்
வியாபித்திருந்தது. சன்மார்க்கத்தையும், ஜீவகாருண்
யத்தையும், பெற்றோர் வழிகொள்கையும், ஸர்வ
சிருஷ்டிகளிடமும் இருக்கவேண்டிய அந்யோந்ய
பாவத்தையும் உலகெங்கும் பரவச்செய்த புண்ய
சிரேஷ்டராகிய அவரை எத்தனைகாலம் நாம் மற
ந்திருந்தோம். அவர் வெட்டியசில சாஸனங்களின்
லிபியையோ வெகுகாலம் வரை அறிந்துகொள்ள
முடியாமல் உழன்றோம். ரோமாபுரிராஜ்யம் வரை
எட்டிய அவருடைய போதனாவிசேஷங்களையும்,
அவருடைய கல்லெழுத்துக்களின் பொருளையும்
'ப்ரின்ஸெப்' தான் நமக்கு எடுத்துக் காட்டினார்.
ஸம்ஸ்கிருத ஸாஹித்யத்தில் தலைமைபெற்றுள்ள
அசுவகோசரை நாம் அறிந்து ஆண்டு முப்பதே
யன்றோ ஆகின்றன? காவ்யம், ஸங்கீதம், தத்வ
சாஸ்ரம் நாடகமியற்றல், கதை சொல்லுதல் இத்
துறைகளில அவருக்கு இணையேகிடையாது. இரு
ந்தாலும் அவர் ஞாபகத்தை நாம் அறவே மறந்து,
முப்பது வருஷங்களுக்கு முன்னர்தான் மேல் நா
ட்டாரால் மறுபடியும் நினைக்கலாயினோம். ஆதலால்
நம் பெரியோர்கள் பலருடைய ஞாபகத்தையே
நாம் மறந்திருக்கையில் அவர்களுடைய நாமதேய
ங்களை புனர் உத்தாரணஞ் செய்வித்தது ஐரோப்
பிய பண்டிதர்களே என்பது சொல்லாமலே
விளங்கும் (அபிப்ராயபேதம்.) உலகத்திலுள்ள
இதர நாட்டு நாகரிகத்துடன் கலக்காமல் ஒதுங்கி
நிற்பதால் உண்டாகும் தீமை இவ்வளவு அவ்வள
வல்ல. இவ்விதமாக தூரநிற்றல் இந்தியாவுக்கு
க்ஷேமகரமா?

பரதகண்டம் இவ்வாறு தான் ஒதுங்கிநிற்றலின்
பலாபலன்களைக் கண்டறிந்துகொண்டிருக்கிறதா?
கி. பி. ஓராயிரமாண்டுகளுக்குப் பின்னர், அதா
வது முஹம்மது கஜ்நி படையெடுப்புக் காலம்
சுமார் தொடங்கி நாளது வரைக்கும் ஹிந்து தேச
சரித்திரமானது இஸ்லாம் மதத்தின் உயர்வுதாழ்
வுடன் சம்பந்தப்பட்டதாய் அதனின்றும் பிரிக்கப்
படக்கூடாதபடி ஐரோப்பிய சௌபாக்கிய தௌ
ர்பாக்கியப் போக்கைப் பின்பற்றி
நிற்கின்றது. இன்னும் பண்டைக்கால
சரித்திரத்தை யாராய்வோமானால், பரத
கண்டம் மஹோன்னத நிலைமை பெற்றுத் துலங்கிய
நாட்களில் அந்நாடு இவ்வாறு தனியாய்ப் பிரிந்து
நின்றதாகக் காணவில்லை. பாதகண்டசரித்திரத்தின்
ஆரம்பகாலத்தைக் குறித்த சாஸனமொன்று
அர்மீநியாவில் கண்டெடுக்கப்பட்டது. சென்ற
பல்லாயிர மாண்டுகளின் இருள்படர்ந்த ப்ரதேச
த்தில் அடுத்ததுபோல் ஒளிவீசிச் சற்றே விளங்கச்
செய்வன பாபிலன் பாரஸீகம் இந்நாட்டில் கிடை
த்த சிலாசாஸனங்கள் கிரந்தங்கள் முதலியனவாம்.
அப்புறம் கிரேக்க நாகரிகம் விருத்தியடைந்து பர
விய நாட்களில் கிரேக்க ஆசிரியர்கள் இயற்றி
யுள்ள நூல்கள் பெரிதும் பயன்படுவனவாயிருக்
கின்றன. கிரேக்க ஆசிரியர் களுடைய நூல்களின்
உதவி நமக்குக் கிடைத்திராவிட்டால் ஹிந்துதேச
சரித்திரம் திக்குதிசை தெரியாத வெறும் சூந்யப்
பிரதேசமாய்த் தான் இருந்திருக்கும். இந்திய பூர்வி
கசரித்திரத்தை ஓர் ஒழுங்குபடுத்தி உண்மையை
வெளிப்படுத்தப் பெரும சாதனங்களாயிருந்தன,
கிரேக்கர்கள் இயற்றியுள்ள யாத்ராக் கிரந்தங்களே.
வில்லியம் ஜோன்ஸ் என்பவர் க்ரேக்க 'ஸாண்ட்ர
கோடஸ்' என்னும் நாமதேயம் இந்திய சந்த்ரகுப்
தனைக்குறிக்கிறது என்று நிர்ணயம் செய்ததே
ஹிந்துதேச சரித்திரத்துக்கு மூலாதாரமாய் நிற்

கின்றது. சுமார் ஓர் ஆயிர மாண்டுபரியந்தம் உள்ள ஹிந்து தேசசரித்திரம் முழுமைக்கும் நமக்குக் கிரேக்சரித்ராசிரியர்கள், யாத்ரிகர்கள் எழுதிவைத்துள்ள நூற்களே ஆதாரமாயிருக்கின்றன.

நாகரிகங்கள் தம்முள் பரஸ்பர ஸம்பந்தம்

இவ்வாறாக நீடித்த போக்குவரவால் பரதகண்ட நாகரிகமும் இதர நாகரிகங்களும் தம்முள் எவ்வளவு தூரம் ஒன்றினொன்று மாறுதலடைந்திருக்கலாம் என்னும் விஷயம் முக்கியமாய்க் கவனிக்கத்தக்கது. கி. பி. சகாப்தம் ஆரம்பகாலத்தில் சீனதேசத்துக்கும் பரதகண்டத்திற்கும் போக்குவரவு தொடக்கமாகிறது. அதுமுதல் ஆயிரவருஷ பரியந்தம் மதப்பற்றும், வர்த்தக வியாபாரப்போக்குவரவும், ராஜாங்க விஷயங்களுமாகச் சேர்ந்து பரதகண்டத்துக்கும் சீனத்துக்கும் தம்முள் பரஸ்பர அந்யோந்யபாவம் அதிகரிக்கலாயிற்று. இவ்வித போக்குவரவுக்கு இரண்டு மார்க்கங்கள் ஏற்பட்டன. முதலாவது, பாமீர் மேட்டுப்ராந்தியவழி துருக்கிஸ்தான மூலமாகச் சென்றது. இன்னொரு வழி இன்ஸாலிந்தியா மார்க்கமாய் இந்திய துறைமுகங்களுக்கும் சீனத்துறைமுகங்களுக்கும் போக்குவரவு ஏற்படச் சாதனமாயிருந்தது. க்ரேக்கரோடு சம்மந்தம் ஏற்பட்ட காரணமாய் ஜஸ்டினியன் சக்ரவர்த்திகாலத்தில் ஏற்பட்ட "ஸெரிண்டா" என்னும் கலப்பு நாகரிகம் சீனருடன் உறவு காரணமாய் "ஹிந்துசீன" என்னும் நவீன நாகரிகமும் உற்பத்தியான இவ்விரண்டு நாகரிகமும் பரதகண்டத்தினரும் கிரேக்கரும் சீனரும் சந்தித்த நடுப்பிரதேசத்தில் இன்னும் காணப்படுகின்றன. இவ்வித சந்தியால் ஏற்பட்ட நாகரிகமே ஏற்றமடைந்திருந்ததாகத் தெரிகிறது. மத்ய ஆசியா ப்ரதேசத்தில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நூதன விஷயங்களைக் கவனித்துப்பார்த்தால் அவ்விடங்களில் இந்திய நாகரிகம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருந்ததாக நமக்குத் தெரிகிறது. சற்றும் ஹிந்துதேச ஸாஹித்ய, சித்ர சிற்ப வகைகளினின்றும் மாறாத சித்ர, சிற்ப சாஸ்த்ரங்கள் அப்பிரதேசத்தில் தழைத்தோங்கியதாகத் தெரியவருகிறது. கடைசியாக கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அதற்குமுன் வெறும் காட்டு முராண்டிப்ராந்த்யமாயிருந்த திபேத்நாட்டில் பௌத்த மடங்களும், கோயில்களும், உண்டாயின. பௌத்த ஸந்யாஸிகள் பெரிதும் பௌத்த ஸாஹித்யத்தை ஆதரிக்கலாயினர்.

இவ்வாறாக மத்யதரைக்கடல் தொடங்கிப் பஸிபிக் மஹா ஸமுத்ரம் ஈறாகவுள்ள பல நாட்டினருமாகச் சேர்ந்து தாம் எழுதியுள்ள க்ரந்தங்களாலும், தம் நாகரிகச் கிளர்ச்சியினாலும் பரதகண்டத்தின் அந்தகாரமடர்ந்த சூந்ய பிரதேசத்தின் மீது சிறிதுசிறிது ஒளி வீசி அதைக் கண்ணுக்குப் புலப்படும்படிச் செய்கின்றனர். இவ்வாறாக வீசப்படும் வெளிச்சம் போதுமானதாயில்லை. முக்ய அம்சங்களைப்பற்றி விவரித்துக்கொண்டே போகும்போது திடீரென நடுவில் நின்று விடுகிறது; இல்லாவிட்டால், அநாவசியமான சில விவரங்களையெல்லாம் படிப்போர் சலிப்படையும்படிச் சொல்லிக் கொண்டு போகின்றன. இவற்றையெல்லாம் ஆழ்த்தெளிய ஆய்ந்து தேர்ந்து ஆழக்கரைகண்டு பரத கண்ட நாகரிகத்தின் உண்மையான மஹாத்வத்தையும், அதன் பரப்பையும், அதனால் பிறர் அடைந்த நன்மையின் அளவையும் கண்டறிவது இந்திய மாணக்கர்களாகிய நீங்கள் உங்கள் தாய் நாட்டுக்குச் செலுத்தவேண்டிய பிரதம கடனாக மனதில் கொள்ளுதல் வேண்டும். தற்காலத்தில் ரஸாயன சாஸ்திர அபிவிருத்தியும், இஞ்சினீயரிங் வேலைகளுமே அதிகமாய்ப் பாராட்டிப் பரிபாலிக்கத்தக்கவை. மற்றதெல்லாம் பதர் எனச் சிலர் சொல்லக்கூடும். வாஸ்தவந்தான், அவைகள் முக்கியமானவை தான். மனிதர்களுடைய வாழ்க்கையின் துன்பங்களைக் குறைத்து இன்பங்களைப் பெருக்கும் வரை அவைகள் அதிக அவசியமானவை யென்பதை மறுக்கமுடியாது. ஆயினும் சிறிதுகாலத்திற்குமுன் நடந்தகோரசம்பவங்களால் உண்மையான நாகரிகக்கிளர்ச்சிக்கும் இவ்விதபோலி நாகரிகத்துக்கும் எவ்வளவு பேதமுண்டென்பது நமக்குக் கரதலாமலகம் போல்வெளியாயிற்று. உண்மையான நாகரிகம் நம்முடைய மனப்போக்கையும், எண்ணங்கள், யோசனைகள் இவைகளின் அபிவிருத்தியையும் ஒட்டியதாகும். மனதையொட்டிய நாகரிகமே உண்மையான நாகரிகம்.

வானத்தை யளாவிநிற்கும் கட்டடங்களும், அக்கரை கண்ணுக்குத் தெரியாதபடி நீண்டிருக்கும் பிரம்மாண்ட வாராவதிகளும், கோடிக்கணக்கான ஜனங்களையும் நொடியில் மடியும்படி செய்யக்கூடிய நூதன சக்திகளுக்காக உடல், பொருள் ஆவியை ஸமர்ப்பிக்கும் இந்நாட்களில் கூடப் பல்லாயிர வருஷங்களாக மனோசாந்தி யெனும் மோக்ஷத்தைத் தேடியுழலும் இந்த நாடானது அந்த மோக்ஷத்துக்கும் மனிதவர்க்கத்துக்கும்இடையிலுள்ள இருள்மயமான ஸாகரத்தைக் கடக்க உத்தம வாராவதியை மனது என்னும் தச்சனால் தான் செய்துமுடிக்கமுடியும். ஆதலால் இப்போது பாரததேவியைத் தூய நிலைக்குக் கொண்டுவருவதையே உமது வாழ்க்கைப்பயனாகக் கொள்ள வேண்டிய நீங்கள் முதன் முதலில் உங்கள் நாடு தற்காலம் அடைந்திருக்கும் துர்க்கதியை யகற்றுதல் அவசியம். அதற்காக நீங்கள் இப்போது செல்லும் பாதையினின்றும் பின்வாங்கி உத்தம பாதையைத் தெரிந்து முன்னுக்குச் செல்லவேண்டும். பண்டைநாட்களில் கீழ் நாடுகளுள் பரதகண்டம் தலைமை வகித்தது எவ்வகையான ஆற்றலால் என்பதைக் கண்டறிதல் வேண்டும். கோடிக்கணக்கான மக்களைப் பெற்றெடுத்து வளர்த்த பாரதமாதா, எத்தனையோ வருஷங்களாக ஆற்றொணாத் துன்பங்களையும், துக்கங்களையும் ஸஹித்து, அவ்வப்போது எத்தனையோ அரிய பெரிய நவநாகரிகங்களையெல்லாம் உலகுக்களித்த பாரதமாதாவானவள், இன்னும் பலகோடி மக்களைப் பெற்று அவர்களுக்குமாத்திரமேயன்றி அவளில்லத்தை நாடிவரும் அதிதிகள் அனைவருக்கும் அபயமளித்து ரக்ஷிக்கும் ஸகல ஐசுவர்யங்களும் பொலிந்து கிடக்கும் மஹாலக்ஷ்மியை நீங்கள் அவள் சந்நிதியில் நின்று ஸ்தோத்ரம் மாத்ரம் செய்தல் போதாது. அவருடையாதிபத்தை முன்னிட்டு ஸாத்விகத் துறையில் உங்களாலியன்றவரை அவளை அத்தூய நிலைக்குக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

வயிற்றின் கொடுமை

[Rights of Translation Strictly Reserved.]

நேற்று அமாவாஸைதினம், இரவில் நான் தூங்குகையில், யாரோ, வெளுத்த மேனியும், கருத்த ஆடையும், சிரித்த முகமும் உடைய மனிதன், எனது உடலையும் உருவங்களையும், மெதுவாய்க்

கைகளால் தீண்டி எழுப்பியதுபோல் தோன்றி
ற்று; உடனே எனது ஆக்கையினின்றும் அங்
கங்கள் பிரிந்து கிளம்புவதுபோல் இருந்தது.
சற்று நேரத்திற்கெல்லாம், எனது தலைப்பக்கத்
தில், ஒரு தடியில் பனங்காயைச் சொருகி வைத்
ததுபோல, ஓர் உருவம் காணப்பட்டது. இருபக்
கங்களிலும் மெலிந்த மேனியும், நகைவிளங்கிய
முகமுமாய் இரண்டு உருவங்கள் காணப்பட்டன.
கால் புறத்திலும், அவ்வாறே, தடித்தமேனியு
டன், கவிழ்ந்த முகத்தில் புன்னகை காட்டி, இர
ண்டு உருவங்கள் நின்றன. நடுவில், வயற்றின்
மேல், வண்ணான் சாலின்மீது குடுக்கை வைத்த
துபோல, சிறுத்ததலையும் பெருத்தவயிறும் குறு
கிய கால்களுமுடைய பெரிய தவளை போன்ற
தொன்று எழுந்து, தலையை அசக்கிற்று. இவை
களை நோக்கி நான் பிரமித்திருக்கையில், வயிற்றி
லிருந்து வந்த உருவம் பேச ஆரம்பித்தது.

வயிறு—"தலையரே! கையரே! காலரே! நீங்க
ளெல்லாம் எனது உருப்புகளாயிருந்ததை இப்பொ
ழுது மறந்துவிட்டதாகக் காணப்படுகின்றது.
நீங்களே இவ்வாக்கையில் முக்கியமானவர்களெ
ன்று நினைக்கிறீர்கள். அதிலும் தலையர் தன்னி
லும் சிறந்தவன் இல்லையென்று நினைந்து செருக்
கடைந்திருக்கிறார். இதுகளையெல்லாம் தொலை
த்து, என்னுடைய பலத்தைக் காட்டாவிட்டால்,
உடலுக்குக் கெடுதி நேரிடுமென நினைக்கிறேன்.
உடலென்னும் பெயர் எனக்கேயன்றி, உங்களுக்
குக் கிடையாது. அதன்றியும் ஜீவராசிகள் உற்
பத்தியாவது என்னிடத்தே யிருந்தல்லாமல், உங்
களிடத்திலிருந்து அல்ல. உலகம் முழுவதும்
படைக்க எண்ணிய பரந்தாமன் தனது உந்திக்
கமலத்திலல்லவா அயனை உண்டாக்கினான்? தலை
யிலும், கால் கைகளிலும் உண்டாக்கவில்லையே!
மற்றும், நாம் மரமென்பது, அதின் உடலையோ, அல்
லது கிளைகளையும் வேர்களையுமோ?—கவனியுங்
கள். பின்னும், இவ்வாக்கையில் பெரும் பாக
மும் நானாகவே இருந்து, உங்களுக்கு உதவும்
உணவுகளைச் சேர்த்துப், பக்குவப்படுத்தி, உங்க
ளைக் காப்பாற்றிக் கொண்டிருக்க, நீங்கள் என்னை
அவமதித்து, சிறப்பெல்லாம் நீங்களே அடைய
யத்தனித்துவருவது உங்களுக்குக் கெடுதியையே
உண்டுபண்ணுமென்பதில் சந்தேகமில்லை. நன்றாய்
யோசிக்குமிடத்தில், உங்களால் தேகத்திற்கு
ஆயாசமுண்டாவதல்லாது, ஏதேனும் உபயோக
முண்டோ? அதிலும் இத்தலையரால் வரும் கேட்
டிற்களவில்லை. அவருக்குள்ள வெளி விஷயங்
களை கவனிக்கும் சக்தி எனக்கு மிகுந்த துக்கத்
தை உண்டாக்குகின்றது. அந்நாளில் எவனோ
புஸ்தகத்தில் எழுதிவிட்டானென்று, அதைக்கே
ட்டு, எனக்குரியதான உணவுகளை வேண்டும்
சமயங்களில், கொடாமல் என்னைத் தலையர் அடக்கி
ஆளுகின்றார். தலையரோ தான் பேசுவதிலும்,
பிறரைக் காண்பதிலும், அவர்கள் சொல்லைக் கே
ட்பதிலும் ஆவல் கொண்டவராய் என்னை மறந்து
விடுகிறார். நான் அதினால் மெலிவடைகிறேன்.
இவருக்கு வந்த ஏற்றமெல்லாம் என்னால் அல்ல
வா? அதை அவர் சற்றும் நினைக்கவில்லையே! அவ
ருக்குத் தலையென்ற பெயர் வந்தகாரணம் அறி
யாது, மயங்குகிறார்; அவர் உடலின் ஒரு தலைப்பில்
இருப்பதுபற்றியல்லவா, அப்பெயர் வந்தது. அதல்
லாது, தன்மைபற்றி வந்ததாக நினைத்துவிட்டார்.
முன்னர், நான்கு கால் ஜீவனாக நாம் இருந்தகாலத்
தில், தலையும் உடலும் சமநிலையில் அல்லவா இரு
ந்தன? இப்பொழுது நான் எனது சௌக்கியத்திற்
காக எழுந்து நின்ற காலத்தில், தலை மேலே இருப்
பதால், அதற்கு அதிகச் சிறப்பு உண்டாய்விட்ட
தா? இத்தலையர், உடலைப் பற்றிப் பிரஸ்தாபம்
வரும்காலத்திலெல்லாம், தானே முன் நின்று,
தலைமை பாராட்டுகிறார். இது முற்றிலும் தகாத
காரியம். இதுகளையெல்லாம் இப்பொழுதே முடி
க்க எண்ணங்கொண்டேன். இனி, எக்காரியத்தி
லும் என்னையே முன்னாக வைத்து நடத்தவேண்
டும். இதுவரையிலும் நான் முன்னுக்குவர யத்
தனித்த பொழுதெல்லாம், கைகளின் வல்லமை
கொண்டு, வார் இட்டு, இறுக்கிக் கட்டுவதுபோல்,
இனிச் செய்யவிடேன். எனது பெருமையை
நன்குணர்ந்தேன். நானே முன்நின்று நடத்திக்
கொள்கிறேன். நீங்களெல்லாம் பின் பலனாய்
இருக்கவேண்டுமே யொழிய, முன்னுக்குவந்து
நிற்கக்கூடாது. கையர்களே! காலர்களே! நீங்கள்
தலையருடைய துற்போதனையைக் கேட்கவேண்
டாம். எப்பொழுதும் போலவே, எனக்குக் கீழ்ப்ப
டிந்து இருங்கள். உங்களுக்கு எக்காலத்திலும்
என்னைத் தாங்கிக் கீழே நிற்கும் தொழிலேயல்ல
வா? இப்பொழுது அதைச் செய்யாமல் காலர்
என்னை அவமதித்தல் கூடுமா?"

என்று இவ்வாறு கூறியவுடன், காலர் எழுந்து
நின்று பேசத் தொடங்கிற்று.

காலர்: "ஏ, வயிறே! நீர் தலையரைப் பற்றிச்
சொல்லியதெல்லாம், உம்மிடத்திலேயே இருக்
கின்றதை கவனிக்கவில்லையே! வேர் அற்றால்
மரம் விழுமென்பதை அறியவில்லையே! நாங்கள்
எங்கள் தொழிலைச் செய்யாவிட்டால், உமக்கு
மற்றைய உருப்புகளால் என்ன பயன்படும்? இரு
ந்த விடத்தை விட்டு அசையாமல், கல்லாய்க்கிட
க்க வேண்டுமல்லவா? உம்மை ஜீவனாக்கி, ஓடி
யாடிப், பலரும் காணப் பயிலவைப்பதும் நாமே
யன்றோ? நாங்கள், உமக்கும், மற்றைய தலைய
ருக்கும் கையர்களுக்கும், ஆதாரமாய் அடியிலிரு
ப்பதைக் கருதாது, கீழ்ப்பட்டவர்களென எம்மை
இகழ்வது நன்மைக்கா? நீர் சொல்லியபடியே
ஒரு தலைப்பிலிருக்கும் தலையருக்கு ஏற்றம் இல்லை
யெனில், மற்றொரு தலைப்பிலிருக்கும் எமக்கும்
இழிவுண்டோ,—ஏன் கவனிக்கவில்லை? நம்மை
யெல்லாம் படைத்த கடவுள் ஒன்றாகச் சேர்த்து
வைத்ததை நோக்கின், நம்மில் ஏற்றமும் தாழ்வு
மில்லையென்பது நன்றாய் விளங்கவில்லையா? நல்
லதிருக்கட்டும். நீரே யெல்லாவற்றிற்கும் முன்
னிற்கவேண்டும் என்றீரே,—அது அழகாகுமா?
எல்லோரும் பார்த்து இகழத்தக்கதாய் இருக்கு
மே யொழிய, வேறு நன்மை பயக்குமா? நீர்
அவ்வாறு பெருமிதங்கொண்டால், உம்மைத் தா
ங்கி நடப்பது எமக்கும் கூடுமா? அதை யோசி
க்கவில்லையே! பார்ப்போருக்கு நகை விளைவிக்கு
மென்பதை அறியீரா? நாம் எல்லோரும் ஆக்கை
யினது உருப்புகளென்றும், மேலும் ஒற்றுவாழ்
வதே அழகென்றும், அவரவர்களுக்கு ஏற்பட்
டிருக்கும் தொழில்களைச் செய்வதினால் மேன்மை
யும் கீழ்மையும் வாராதென்றும் எனக்குத் தோன்
றுகிறது. அது நிற்க, வயிறர் கொண்ட துராசை
யால், உடலுக்கே அபாயம் வருமென்பது நிச்ச
யம். உமக்கென்ன தோன்றுகின்றது,—கைய
ரே?" என்றவுடன், கையர் எழுந்து, தலையை
நான்கு புறங்களிலும் திரும்பிப்பார்த்து, கலகல
வென்று சிரித்துக் கூறிற்று.

கையர்: "அறிவிற் சிறந்த வயிறரே! இப்
பொழுது காலர் சொல்லிய மொழிகளைக் கேட்ட
பிறகு, உமக்கு அபிப்பிராயம் மாறியிருக்குமென்
று நினைக்கின்றேன். மற்றும், தலையரையும் காலர்
களையும் போல், உமக்குப் இருதலைப்பிலும் நாங்

கள் இல்லாவிட்டாலும், நாங்களே உமக்குப் பக்கபலமென்பதை நீர் அறிந்திருக்கலாம். உமக்குத் தலையாலும் கால்களாலும் இடையூறுகள்நேரிட்டபொழுதெல்லாம், எங்களுடைய பலன் கொண்டல்லவா, பிழைப்பது? எல்லா உருவங்களுக்கும் வரும்கேடுகளை நீக்குவதும் நாங்களேயன்றோ? ஒரு சிறு முள் குத்தினாலும், அதை எடுத்தெறிவதும் நாமே யன்றோ? நீங்களெல்லோரும் வருந்துவதல்லாமல், செய்யும் வகை யறிவீரோ? உமக்கெல்லாம் உபகாரமாகப் பிரயாசைப் படுவதல்லாது, உமக்கெல்லாம் வரும் அபாயங்களைச் சொல்லாமலே, தடுப்பதும் நாமேயன்றோ? உமக்காகப் பிறரிடத்தில் போரிட்டு, மெலிவடைந்தும், கீழோர் கால்களைப் பிடிப்பதும், எமக்குத் தொழிலாய்விட்டதே! நாங்கள் தேகப் பிரயாசையால் தேடிவரும் பொருள்களெல்லாம் உம்மிடத்தில் சொரிந்துவிடுகிறோம். நீரும் அவைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கி வைத்துக்கொண்டு, எமக்குச் சிறிது நீரும் தசையுமே அளிக்கிறீர்! வயிறரே,—உமது நன்மைக்காக நாங்கள் படும் பாட்டைக் கவனிக்காது, நீரே முன் நிற்கவேண்டுமென்றால், இடையூறு வந்த காலத்தில் உம்மைக் கட்டியணைக்கக்கூட எம்மால் ஆகாது. நீரே உம்மைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டி வரும். பக்கபலமிழந்த உம்மை எவரும் இகழ்வர். இதுகளையெல்லாம் கவனித்து, எப்பொழுதும்போல், ஒற்றுவாழ்வதே நலமென நினைக்கின்றேன். தலையருடைய அபிப்பிராயம் இன்னதென்று தெரியவில்லை,"

எனச்சொல்லி முடித்தவுடன், தலையர் மெதுவாய் முடியைத் துளக்கி, மொழிந்ததாவது:—

தலையர்—"அருமைத் தோழர்காள்! வயிறர் மொழிந்த மாற்றங்கள் என் மனதில் அடங்காத் துயரை விளைவிக்கின்றன. அவரேதோ பிறருடைய தூண்டுதலின்பேரில் சொல்லுவதாகவே நினைக்கிறேன். உலகம் தோன்றியது முதல், நாம் ஒற்றுவாழ்ந்திருக்க, இப்பொழுது நான் ஏதோ மற்றையவர்களைப் பார்க்கிலும் ஏற்றம் கொண்டாடுவதாக நினைப்பது சரியா? நான் உடலுக்கு மேலே யிருப்பதினால், சிறப்படைந்ததாக நினைத்தேன், என்கிறார் வயிறர். அவ்வாறு இருப்பதில் எனக்கு எளிதாய் அபாயம் வருவதன்றி, சிறப்புண்டோ? பிறரால் அடியுண்ணும் காலத்திலெல்லாம், நானேயல்லவா முதலில் அகப்பட்டுக் கொள்ளுகிறேன்! கையர்களுடைய பலனில்லாவிட்டால், அழிந்துவிடவேண்டி வரும். இப்படிப்பட்ட அபாயஸ்தானத்திலிருப்பதையும் சிறப்பென எண்ணுவது மதியின்மையன்றோ? கால் நடையாயிருந்த காலத்தில், நானும் உடலோடு ஒரே நிலையாய் இருந்ததாகச் சொன்னீரே,—அப்பொழுதும் நான் உடலுக்கு முன் போகவில்லையா? என்னைக் காத்துக் கொள்ளவேண்டி அமைக்கப்பட்டிருந்த கொம்புகளைக்கூட இப்பொழுது இழந்தேன். கையரையே துணையாக நம்பியிருக்கிறேன். அக்காலத்தில் பிறரால் வரும் துயரெல்லாம் உடலுக்கே! கால் நடையாய் இருந்த காலத்தில், முதுகில் அடிப்பார்களே ஒழிய, முகத்திலடியார். இதை நீக்க எண்ணியே உடல் நிமிர்ந்து நின்று, என்னையும் கையரையும் முன்னுக்கு விட்டுத், தனது துன்பத்தைக் குறைத்துக்கொண்டது. ஆதிகாலத்தில் கூட பிரமன் செய்த பிழைக்காக அவர் தலையை யல்லவோ அரன் கிள்ளி எறிந்தான்! வரும் கேடெல்லாம் தலைக்கேயல்லவா? இது இவ்வாறாக, எங்கள் பலனைக்கருதி நாங்கள் முன் நிற்பதாகச் சொல்வது தகுமோ? வயிற்றின் கொடுமையினால் நான் படும்பாடு கொஞ்சமல்லவே! அவரது துயரை நீக்கும் பொருட்டு, நான் வணங்கத்தகாதவர்களை வணங்கியும், மகாலோபியை வள்ளலென்றும், பிறவிக்குருடனைத் தாமரைக் கண்ணனென்றும், அலியை, ஆண் சிங்கமென்றும், பலவாறாக முகஸ்துதி செய்து, பிழைக்க வேண்டி வந்தது. வயிற்றிற்கு நோய்வந்தகாலத்திலெல்லாம், ருசிக்காத, கடுமையான மருந்தை அருந்தி, எனது வியாபாரங்களை யெல்லாம் அடக்கிக்கொண்டிருக்கிறேன். இத்தனைத்தும் எனக்கு சிறப்பை யுண்டாக்குகின்றதா? — கவனியுங்கள். வயிறர், நான் அவருக்கு மேலிருப்பது தகாதென்றார். அங்கிருந்து நான் அடையும் பலன் ஒன்றுமில்லை. நானும் அவருக்குக் கீழே இருந்து விடுகிறேன். வேண்டுமானால் காலர்களை மேலே வைத்துக்கொள்ளலாம். அல்லது, அவரே மேலே நிற்கலாம். ஆனால் பார்ப்பவர்கள் தலைகீழாய் நிற்கிறானென்றும், தலையிலா முண்டமென்றும் நிந்திப்பார்களே என்று கவலை கொள்கிறேன். என் வரையிலும் கீழிறங்கி, பின் புறத்திலிருப்பதில் ஆக்ஷேபணையில்லை. எல்லோரும் எப்படித் தீர்மானித்தாலும் அப்படியே செய்கிறேன்,"

என்றவுடன், ஸந்யாஸி ஒருவர், மலர்ந்த முகத்தோடு அருகில் வந்து, கையிலிருந்த பிரம்பால் இவ்வறுவர்களையும் மெதுவாய் அடிக்க, எல்லோரும் என்னுடலில் புகுந்து விட்டார்கள். நானும் விழித்துக்கொண்டேன். அருகிலிருந்த கடியாரம் ஆறுமணி அடித்தது.

—"ராமசந்திரர்."

PRESS OPINION

"Tamil World"—We are glad to notice that the contents are uniformly of a very high level of excellence. Dr. Rabindranath's *Chitra*, with his sanction, has in it been fully translated into Tamil very ably, and we notice that the "Wreck" is now serially appearing. The thanks of the Tamil public are due both to the Poet and Messrs. Macmillan and Company, for their generous permission to render such works into the Tamil language. We should here point out the rare spirit of urbanity and tolerance, so characteristic of the leading articles in the *Tamil World*. The journal is conducted on healthy lines.—*New India.*

3rd August, 1922.

துப்பறியும் நாவல்கள்.

சுந்தர் சிங்

அல்லது பாஸ்கர விலாஸ்

படுகொலை ரூ 1-12

சிவ குமாரன்

அல்லது கொலைஞன் யார்? ரூ 1-0

ஞானம்பாள்

அல்லது கள்வர் கவர்ந்த

கல்யாணப் பெண் ரூ 0-12

வி. நாராயணன் & கம்பெனி,

4, கொண்டி செட்டித் தெரு, சென்னை.

பரத நாட்டின் நிலைமை.

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்றுப் பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக் கிடமாய்விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர், புசிக்க வகையின்றியும், கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச் சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர் நிலைமையெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத் தொழில் விருத்தி செய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்றுச் சுகவாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனையவேண்டு மென்பதே இந்நூலின் நோக்கமாகும். விலை ரூபா. 1—0—0

ஆரிய சரித்திரம். நீதிக் கதைகள்.

சுமார் 300-பக்கங்கள் உள்ளது; சித்திரப்படங்களும் அமையப்பெற்றது; நான்காம்பதிப்பு. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய்ப் பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூபா. 1—0—0

கணேஷ் கம்பெனி,

39, தம்புசெட்டித் தெரு, சென்னை.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழிபெயர்த்தமைத்தது.

விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10. படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது.

விலை ரூ. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம பதிப்பு. விலை அணா 6.

கதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

வி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிக்க வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரந்தோறும் படிக்கும் பக்த சிரோமணிகளுக்கு இநநூல் மிகவும் உபயோகமானது. விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்

கிருஷ்ணஸ்வாமி சர்மா

அவர்களால் எழுதப்பட்டது.

	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மகிழ்ச்சியுண்டாக்ககூடியதாயுமுள்ளது. இன்பச்சுவை மிகுந்தது மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையில் எழுதியது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,

சென்னை.

"தமிழ் உலகு"

சென்னை மைலாப்பூரிலிருந்து ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன், எம்.ஏ. அவர்களால் வெளியிடப்பட்டு வரும் இவ்வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையைப்பற்றி நமது அபிப்பிராயத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். அவருடைய புத்தகங்களின் உரிமையை வகித்து வரும் மாக்மிலன் கம்பெனியாரும் இதற்கிணங்கி இருக்கின்றனர். 'சித்திரா'வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. மொழி பெயர்ப்பில் மகாகவியின் ஆழ்ந்த கருத்து பின்னப்படாமலிருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. பக்கங்களும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல விஷயங்களைப்பற்றிய வியாசங்கள் வெளியாகின்றன. தாய்பாஷையை அபிவிருத்திசெய்வதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகையை அன்னார் நடத்திவருவதால் தமிழ் நாட்டினர் இதனை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை நாம் கூறத்தேவையில்லை.

சுதேசமித்திரன், 16—8—1922

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)

ஞாயிற்றுகிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் 3 0 0	½-வருஷம் 3 8 0
1-வருஷம் 5 0 0	1-வருஷம் 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்களை அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில்மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

விளம்பர விகிதம் :— சென்னை மைலாப்பூர், 16, பசுபதி அக்கிரஹாரம் "தமிழ் உலகு" மானேஜருக்கு எழுதி யறிந்துகொள்ளவும்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams : "Adimoorthi" Benares.

சுதேசியமானது ! உபயோகமுள்ளது ! !

அமிர்தாஞ்சனம்
எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16. 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.